**ஆகஸ்ட் – 13**

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பதிவு பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட அரசியல் கட்சிகள்




- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பதிவு செய்யப்பட்ட 23 அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை அதன் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.
- அவற்றில் 22 கட்சிகள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவை, ஒரு கட்சி புதுச்சேரியைச் சேர்ந்தது.
- நாடு முழுவதும் மொத்தம் 334 அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன.
- இந்தக் கட்சிகள் எந்தத் தேர்தலிலும் போட்டியிடத் தவறியதன் அடிப்படையில் இந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன.
- ஜூன் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் பங்கேற்காததற்கு விளக்கம் அளிக்கக் கோரி தமிழ்நாட்டில் உள்ள இதுபோன்ற 24 கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் அறிக்கை அனுப்பியது.
- திருப்திகரமான பதில் கிடைக்காததால், அவற்றில் 23 கட்சிகள் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டன.
- நீக்கப்பட்ட கட்சிகள், 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 29B மற்றும் 29C ஆகிய பிரிவுகளின் கீழ் சலுகைகளுக்கான உரிமையை இழக்கின்றன.
- இந்தக் கட்சிகள் 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் கீழ் வரி தொடர்பான சலுகைகளையும் இழந்தன.
- 1968 ஆம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் முன் ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கீடு ஆணையின் கீழான சலுகைகளுக்கு அவை தகுதியற்றவைகளாக அறிவிக்கப்படும்.


# தேசியச் செய்திகள்

## வருடாந்திர முப்படை விரிவுரைத் தொடர்

- கூட்டுப் போர் ஆய்வுகளுக்கான மையம் ஆனது ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்று அதன் ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், டெல்லி இராணுவக் குடியிருப்புப் பகுதியில் உள்ள மானேக்ஷா மையத்தில் வருடாந்திர முப்படை விரிவுரைத் தொடர் தொடங்கப்பட்டது.
- இந்த நிகழ்வு ஆனது, "Dominating the Future Battlespace" என்ற கருத்துருவில் நடைபெற்றது.



## நோட்டரி வலைதளம்





- சான்றுறுதி அலுவலகம்/நோட்டரி சட்டம் 1952 மற்றும் நோட்டரி விதிகள் 1956 ஆகியவற்றின் கீழ் இயங்கலை வழிச் சேவைகளை வழங்குவதற்காக, அரசாங்கமானது நோட்டரி வலை தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்த வலை தளமானது, மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட நோட்டரி அமைப்புகளை டிஜிட்டல் சார்ந்த சட்ட சேவைகளுக்காக இந்திய அரசாங்கத்துடன் இணைக்கிறது.
- இது தகுதி சரிபார்ப்பு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும், டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்ட பயிற்சிச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் மற்றும்

வருடாந்திர வருமான வரித் தாக்கல் செய்வதற்கும் உதவுகிறது.

- 2025 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதி நிலவரப்படி, இந்த வலை தளம் மூலம் 34900க்கும் மேற்பட்ட டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்ட பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## இந்தியாவில் மருத்துவ சுற்றுலா





- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில், மருத்துவ நோக்கங்களுக்காக 1,31,856 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் (FTA) இந்தியாவிற்கு வருகை தந்துள்ளனர்.
- இந்த காலகட்டத்தில் மொத்த பயணிகள் எண்ணிக்கையில் சுமார் 4.1 சதவீதம் பேர் மருத்துவ நோக்கம் சார் சுற்றுலாப் பயணிகளாக இருந்தனர்.
- "Heal in India" முன்னெடுப்பினை ஊக்குவிப்பதற்காக பொது தனியார் கூட்டாண்மைகள் பயன்படுத்தப்படுகின்றன.
- மருத்துவ வசதி பெறுவதற்கான வருகைகளை எளிதாக்குவதற்காக 171 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களுக்கு இந்திய அரசு மின்னணு/இயங்கலை வழி மருத்துவ நுழைவு இசைவுச் சீட்டு மற்றும் இயங்கலை வழி மருத்துவ உதவியாளர் நுழைவு இசைவுச் சீட்டு வசதிகளை வழங்குகிறது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் மருத்துவ சுற்றுலாப் பயணிகளுக்கான முன்னணி மூல நாடுகளாக வங்காளதேசம், ஈராக், சோமாலியா, ஓமன் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியவை உள்ளன.
- 2024 ஆம் ஆண்டில் 4,82,336 மருத்துவச் சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் வங்காளதேசம் தொடர்ந்து முன்னணியில் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 1,82,945 எண்ணிக்கையாக இருந்த மருத்துவ நோக்கங்களுக்கான மொத்த FTA எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் 6,44,387 ஆக அதிகரித்துள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய அணுசக்தி கூட்டாண்மை மையம்

- GCNEP ஆனது 17 நாடுகள் மற்றும் IAEA உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MoU) கையெழுத்திட்டுள்ளது.

- உலகளாவிய அணுசக்தி கூட்டாண்மை மையம் (GCNEP) ஆனது, அணுசக்தித் துறையின் (DAE) கீழ் உள்ள ஆறாவது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அலகு ஆகும்.
- அணுசக்தித் துறையில், திறன் மேம்பாடு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பில் GCNEP கவனம் செலுத்துகிறது.
- பாதுகாப்பான மற்றும் நிலையான அணுசக்தியை ஊக்குவிப்பதற்காக சர்வதேச அணுசக்தி முகமை (IAEA) உள்ளிட்ட உலகளாவிய பங்குதாரர்களுடன் இது இணைந்து செயல்படுகிறது.




## நிலத்தினால் சூழப்பட்ட நாடுகள் குறித்த ஐ.நா. மாநாடு


- நிலத்தினால் சூழப்பட்ட வளர்ந்து வரும் நாடுகள் குறித்த மூன்றாவது ஐக்கிய நாடுகளின் மாநாடு துர்க்மெனிஸ்தானின் அவாசா எனுமிடத்தில் நடைபெற்றது.
- இந்த மாநாடு ஆனது அவாசா அரசியல் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு நிறைவடைந்தது.
- இந்த மாநாட்டில் 2024 ஆம் ஆண்டு முதல் 2034 ஆம் ஆண்டு வரையிலான அவாசா செயல் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Driving Progress Through Partnerships" என்பதாகும்.
- வர்த்தகம் மற்றும் போக்குவரத்து சார்ந்த சவால்களை எதிர்கொள்ளும் 32 நிலத்தினால் சூழப்பட்ட வளர்ந்து வரும் நாடுகளை ஆதரிப்பதே இதன் நோக்கமாகும்.
- துர்க்மெனிஸ்தான் ஆனது, எதிர்காலத்திற்கான உலகளாவிய மருத்துவம் என்ற சுகாதாரத் திட்டத்தினை முன் வைத்தது.
- இது துபாயில் நடைபெற்ற 28வது பங்குதாரர்கள் மாநாட்டில் (COP28) முதன் முதலில் முன் வைக்கப்பட்ட நிலையான போக்குவரத்து இணைப்பின் உலகளாவிய தகவல் அறிக்கையினை முன்மொழிந்தது.
- இது 2030 ஆம் ஆண்டு முதல் 2040 ஆம் ஆண்டு வரையிலான ஹைட்ரஜன் ஆற்றல் உற்பத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- கழிவுகளைக் குறைப்பதற்காக மறுபயன்பாட்டினை சுழற்சி முறை பொருளாதாரத்திற்கான உலகளாவிய கட்டமைப்பையும் இது முன்மொழிந்தது.
- கடல் பகுதியைப் பாதுகாப்பதற்கான காஸ்பியன் சுற்றுச்சூழல் முன்னெடுப்பு

குறித்தும் துர்க்மெனிஸ்தான் எடுத்துரைத்தது.

- உலகின் மிக மோசமான சுற்றுச்சூழல் நெருக்கடிகளில் ஒன்றைத் தீர்ப்பதற்காக ஐ.நா.வின் ஆரல் கடல் படுகைத் திட்டத்தினை இது ஆதரித்தது.
- இது 2025 ஆம் ஆண்டினை சர்வதேச அமைதி மற்றும் நம்பிக்கை ஆண்டாகவும் முன் மொழிந்தது.
- இது துர்க்மெனிஸ்தானின் நடுநிலையின் 30 ஆம் ஆண்டு நிறைவையும், ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆம் ஆண்டு நிறைவையும் குறிக்கிறது.




## தாய்லாந்து மற்றும் கம்போடியா போர் நிறுத்தம்




- தாய்லாந்து மற்றும் கம்போடியா ஆகியவை கொடூரமான எல்லை மோதல்களுக்குப் பிறகு போர் நிறுத்தத்தை முடிவு செய்வதற்காக மலேசியாவில் நான்கு நாட்கள் அளவிலான பேச்சுவார்த்தைகளை நடத்தின.

- அமெரிக்காவின் ஆதரவுடன், மலேசியாவின் தலைமையிலான ஆசியான் அமைப்பின் நடுவண் சேவையுடன் இந்தப் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.
- போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இரு நாடுகளுக்கும் இடையிலான சரக்குகள் மீதான வரிகள் 36 சதவீதத்திலிருந்து 19% ஆகக் குறைக்கப்பட்டன.
- கம்போடியாவின் பிரீயா விஹார் கோயிலுக்கு அருகிலுள்ள பிராந்தியம் தொடர்பான தகராறு தீர்க்கப்படாமல் இருந்தாலும், ஆசியான் தலைமையிலான கண்காணிப்புக் குழுவிற்கான திட்டங்கள் இந்த விவாதங்களில் மேற்கொள்ளப்பட்டன.

### அஜர்பைஜான் மற்றும் ஆர்மேனியாவின் அமைதி ஒப்பந்தம்

- அஜர்பைஜான் மற்றும் ஆர்மேனியா ஆகியவை வாஷிங்டனில் ஓர் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- 2023 ஆம் ஆண்டில் அஜர்பைஜானின் இராணுவ படையெடுப்பினைத் தொடர்ந்து நாகோர்னோ-கராபாக் பிராந்தியத்தில் சுமார் நாற்பது ஆண்டுகளாக நீடித்த மோதலை இந்த ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டுவருகிறது.
- டிரம்ப் வழித்தடம் எனப்படும் போக்குவரத்து வழித்தடத்தினை உருவாக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.
- இது ஆர்மேனிய சட்டத்தின் கீழ், ஆர்மேனிய பிரதேசத்தின் வழியாக அஜர்பைஜானையும் அதன் நக்சிவன் பகுதியையும் இணைக்கும்.
- 1992 ஆம் ஆண்டு முதல், மோதல் நடவடிக்கைகளில் நடுவண் அமைப்பாக இருந்த ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான மின்ஸ்க் குழு அமைப்பு (OSCE மின்ஸ்க் குழு) கலைக்கப்படும்.




## பொருளாதாரச் செய்திகள்

### சிறிய விற்பனையாளர்களுக்கு GST தகவலறிவிப்பு

- கர்நாடக வணிக வரித் துறையானது, வரி ஏய்ப்பு செய்பவர்களை அடையாளம் காண்பதற்கு UPI தரவைப் பயன்படுத்தியது.
- வரி ஏய்ப்பு செய்ததாக சந்தேகிக்கப்படும் ஆயிரக்கணக்கான சிறு விற்பனையாளர்களுக்கு தகவலறிவிப்புகள் அனுப்பப்பட்டன.
- சரக்குகளுக்கு 40 லட்சம் ரூபாய்க்கு கீழும், சேவைகளுக்கு 20 லட்சம் ரூபாய்க்கு கீழும் வருவாய் கொண்ட சிறு வணிகங்களுக்கு GST விலக்கு அளிக்கப்படுகிறது.
- இருப்பினும், வரி விதிக்கக் கூடிய பொருட்களை விலக்கு பெற்ற பொருட்களுடன்

சேர்த்து விற்கும் விற்பனையாளர்கள் வரி செலுத்த வேண்டியிருக்கும்.

❖ 2025 ஆம் ஆண்டில், UPI பரிவர்த்தனைகள் ஆண்டுதோறும் 260 லட்சம் கோடி ரூபாயை எட்டின. இது சில்லறை விற்பனையில் 28% பங்கினை எட்டியது.

❖ 2025 ஆம் நிதியாண்டில், UPI பரிவர்த்தனைகளில் 70% நுகர்வோர்களுக்கு இடையிலான சக பரிவர்த்தனைகளாகும், 30% நுகர்வோரால் வணிகர்களுக்கு அனுப்பப்படும் பரிவர்த்தனைகளாகும்.

**GST Registration threshold limit**


| Type of Business | Threshold Limit | Applicability |
|---|---|---|
| Selling Goods | ₹40 lakh | Normal Category States |
| Selling Goods | ₹20 lakh | Special Category States |
| Providing Services | ₹20 lakh | All States |

## 2024-25 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி வளர்ச்சி

**INDIA'S TOP AGRICULTURAL EXPORT ITEMS (in million dollars)**

| | 2024-25 | Apr-Jun 2024 | Apr-Jun 2025 | % Growth |
|---|---|---|---|---|
| Marine products | 7405.00 | 1628.87 | 1945.70 | 19.45 |
| Basmati rice | 5944.48 | 1544.92 | 1494.40 | -3.27 |
| Non-Basmati rice | 6527.58 | 1263.34 | 1413.02 | 11.85 |
| Spices | 4451.54 | 1088.89 | 1154.04 | 5.98 |
| Buffalo meat | 4060.54 | 793.28 | 896.82 | 13.05 |
| Coffee | 1805.57 | 519.80 | 588.07 | 13.14 |
| Fruits & vegetables | 2065.39 | 459.14 | 522.44 | 13.79 |
| Tobacco | 1979.01 | 426.86 | 509.19 | 19.29 |
| Processed F&V | 1805.76 | 384.37 | 429.80 | 11.82 |
| Castor oil | 1152.37 | 348.34 | 355.31 | 2.03 |
| Oilseeds | 1344.31 | 332.22 | 306.01 | -7.89 |
| Oilmeals | 1344.39 | 330.69 | 290.19 | -12.25 |
| TOTAL | 51940.67 | 12209.66 | 12922.32 | 5.84 |

*Source: Department of Commerce*




❖ 2024-25 ஆம் ஆண்டில் இந்தியா 437.4 பில்லியன் டாலர் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்தது.

❖ இது 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிறைவடைந்த முந்தைய நிதியாண்டில் பதிவான 437.1 பில்லியன் டாலரை விட 0.1% அதிகமாகும்.

❖ 2025 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாதங்களில், 112 பில்லியன் டாலராக இருந்த மொத்த ஏற்றுமதிகள், 2024 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாதங்களில் பதிவான 110.1 பில்லியன் டாலரை விட 1.7% அதிகமாகும்.

❖ இந்தியாவின் வேளாண் விளைபொருள் ஏற்றுமதிகள் 6.4% வளர்ச்சியடைந்தன, 2023-24 ஆம் ஆண்டில் 48.8 பில்லியன் டாலராக இருந்த இது 2024-25 ஆம் ஆண்டில் 51.9 பில்லியன் டாலராக உயர்ந்தது.

❖ இந்தப் போக்குகள் தொடர்ந்தால், வேளாண் ஏற்றுமதிகள் 2025-26 ஆம் ஆண்டில் 55 பில்லியன் டாலர் மதிப்பை எட்டக் கூடும், இது 2022-23 ஆம் ஆண்டில் 53.2 பில்லியன் டாலராக இருந்த அதிக அளவினை விட அதிகமாகும்.

- 2024-25 ஆம் ஆண்டில் நாட்டின் ஒட்டுமொத்த வணிக வர்த்தகக் கணக்கில் 282.8 பில்லியன் டாலர் ஒட்டுமொத்த பற்றாக்குறை இருந்தது.
- இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 26.6 சதவீத பங்கில், 9.83 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள ஏற்றுமதியுடன் குஜராத் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக இந்தியாவின் முன்னணி ஏற்றுமதி மாநிலமாகத் திகழ்கிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நம்பியோ குறியீடு 2025




- 55.8 மதிப்பெண்களுடன் 2025 ஆம் ஆண்டு நம்பியோ பாதுகாப்புக் குறியீட்டில் இந்தியா உலகளவில் 67வது இடத்தைப் பிடித்தது.
- நகரங்கள் மற்றும் உலக நாடுகள் பற்றிய பயனர் பங்களிப்பு தரவுகளின் இயங்கலை வழி உலகளாவிய தரவு தளமான நம்பியோ தளத்தினால் இந்தத் தரவு வெளியிடப்பட்டது.
- உலகளவில் 49வது இடத்தில் உள்ள கர்நாடகாவின் மங்களூர் இந்தியாவின் பாதுகாப்பான நகரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- குஜராத்தில் உள்ள வடோதரா மற்றும் அகமதாபாத் ஆகியவை முறையே தேசிய அளவில் 2வது மற்றும் 3வது பாதுகாப்பான நகரங்களாகவும், உலகளவில் 85வது மற்றும் 93வது பாதுகாப்பான நகரங்களாகவும் உள்ளன.
- ஜெய்ப்பூர், நவி மும்பை மற்றும் திருவனந்தபுரம் ஆகியவை 60க்கும் மேற்பட்ட பாதுகாப்புக் குறியீட்டு மதிப்பெண்களுடன் முறையே இந்தியாவில் 5, 6 மற்றும் 7 வது இடங்களில் உள்ளன.
- தமிழ்நாட்டின் சென்னை நகரமானது இந்தியாவில் 8 வது இடத்திலும், உலகளவில் 158 வது இடத்திலும் இடம் பெற்றுள்ளது.
- புது டெல்லி, நொய்டா மற்றும் காஜியாபாத் போன்ற நகரங்கள் 55க்கும் மேற்பட்ட அதிக குற்றக் குறியீட்டு மதிப்பெண்களுடன் பாதுகாப்பில் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றன.

# மாநிலச் செய்திகள்


## இந்தியாவின் முதல் திறன்மிகு கிராமம்

- மகாராஷ்டிராவின் கிராமப்புற நாக்பூரில் 1,800 குடியிருப்பாளர்களைக் கொண்ட சத்னாவ்ரி, ஒரு சோதனைத் திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் திறன்மிகு நுண்ணறிவு கிராமமாக மாற உள்ளது.
- இந்த திட்டமானது ஆளில்லா வான்வழி வாகனங்களின் உதவியுடன் வேளாண்மை, திறன் மிகு நீர்ப்பாசனம், நடமாடும் வங்கி, எண்ணிம முறைகள் வழியான பள்ளிகள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கிறது.
- இந்த சோதனைத் திட்டமானது, முழுமையான கிராமப்புற வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக தகவல் தொழில்நுட்பம் அடிப்படையிலான மண் பரிசோதனை மற்றும் அங்கன்வாடிக்கான எண்ணிமத் தீர்வுகள் போன்ற எண்ணிமக் காரணிகளை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




# முக்கிய தினங்கள்

## உலகின் பழங்குடியின மக்களுக்கான சர்வதேச தினம் 2025 - ஆகஸ்ட் 09




- இது பழங்குடியின சமூகங்களின் உரிமைகள், கலாச்சாரங்கள் மற்றும்

அடையாளங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Indigenous Peoples and Artificial Intelligence (AI): Defending Rights, Shaping Futures" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2019 ஆம் ஆண்டினை சர்வதேச பழங்குடியின மொழிகள் ஆண்டாக அறிவித்தது.
- 2022 ஆம் ஆண்டு முதல் 2032 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தினை சர்வதேச பழங்குடியின மொழிகளுக்கான தசாப்தமாகவும் ஐ.நா அறிவித்தது.

## சர்வதேச உயிரி-டீசல் தினம் 2025 - ஆகஸ்ட் 10

- 1893 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான், சர் ருடால்ப் டீசல் (டீசல் என்ஜினை கண்டுபிடித்தவர்) முதன்முறையாக நிலக்கடலை எண்ணெயைக் கொண்டு என்ஜினை வெற்றிகரமாக இயக்கினார்.
- வழக்கமான புதைபடிவ எரிபொருட்களுக்கு மாற்றாக புதைபடிவம் சாரா எரிபொருட்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- அடிப்படையில் பசுமை எரிபொருட்களாக விளங்கும் உயிரி எரிபொருள்கள் ஆனது, சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிபொருட்கள் ஆகும், மேலும் அவற்றின் பயன்பாடு கார்பன் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது குறித்த உலகளாவிய கவலைகளை நிவர்த்தி செய்கிறது.





# இதரச் செய்திகள்

## நிலத்தடி நீர் மாசுபாடு நெருக்கடி

- இந்தியாவில் 85 சதவீதத்திற்கும் அதிகமான கிராமப்புற குடிநீரும், 65 சதவீத பாசன நீரும் நிலத்தடி நீரிலிருந்து பெறப்படுகின்றன.
- மத்திய நிலத்தடி நீர் வாரியத்தின் (CGWB) 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நிலத்தடி நீர்த் தர அறிக்கையானது, 440 மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட 20 சதவீதத்திற்கும் அதிகமான மாதிரிகளில் நைட்ரேட் மாசுபாடு இருப்பதைக் குறிப்பிடுகிறது.
- 9 சதவீதத்திற்கும் அதிகமான மாதிரிகளில் அதிகப்படியான ஃப்ளோரைடு கலப்பு உள்ளது, இது முதன்மையாக இராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானாவில் பல் மற்றும் எலும்பு சார்ந்த ஃப்ளோரோசிஸ் பாதிப்பினை ஏற்படுத்துகிறது.

- பஞ்சாப் மற்றும் பீகாரில், ஆர்சனிக் அளவு, உலக சுகாதார அமைப்பின் (WHO) பாதுகாப்பான வரம்புகளை மீறுகிறது, இது புற்றுநோய் மற்றும் நரம்பியல் கோளாறுகளை ஏற்படுத்துகிறது.
- பஞ்சாப், ஆந்திரப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தானில் உரங்கள் மற்றும் அதிகப்படியான நிலத்தடி நீர் பிரித்தெடுத்தல் காரணமாக 100 ppb அளவிற்கு மேல் யுரேனியம் மாசுபாடு காணப்படுகிறது.
- தொழில்துறை வெளியேற்றத்திலிருந்து வெளியாகும் ஈயம், காட்மியம், குரோமியம் மற்றும் பாதரசம் போன்ற கன உலோகங்கள் நரம்பியல் சேதம் உள்ளிட்ட சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.
- நிலத்தடி நீர் மாதிரிகளில் 13 சதவீதத்திற்கும் அதிகமானவை பாதுகாப்பான இரும்பு அளவை விட அதிகமாகக் கொண்டுள்ளன, இது இரைப்பை குடல் கோளாறுகளுக்கு வழிவகுக்கும்.
- நிலத்தடி நீர் மாசுபாடு ஆனது எலும்பு சார்ந்த ஃப்ளோரோசிஸ் போன்ற நோய்களை ஏற்படுத்துகிறது, இது 66 மில்லியன் மக்களை பாதிக்கிறது மற்றும் பல மாவட்டங்களில் ஆர்சனிக் மாசுபாடுகளுடன் தொடர்புடைய புற்றுநோயை ஏற்படுகிறது.
- நைட்ரேட் மாசுபாடு குழந்தைகளுக்கு ப்ளூ பேபி சின்ட்ரோம் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும் கடுமையான ஆபத்தை ஏற்படுத்துகிறது.
- இந்தியாவின் நிலத்தடி நீர் மாசுபாடு என்பது தினமும் 600 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கும் ஒரு பொது சுகாதார அவசரநிலையாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★